

திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரத்தில் மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன் தலைமையில் தாராபுரம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் டாக்டர் டி.இந்திராணி முன்னிலையில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தேர்தல் பணிமனையை காங்கேயம் கழக வேட்பாளர், கழக துணை பொதுச் செயலாளர், அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார். இதில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர், அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் எம்.பி., உள்பட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி மாவட்ட தலைவர்கள், செயலாளர்கள், நிர்வாகிகள், பிரதிநிதிகள், திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், இந்நாள், முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் மாவட்டம் குன்னம் சட்டமன்றத் தொகுதிக்கு வருகை தந்த

# வேட்பாளர் அமைச்சர் சா.சி.சிவசங்கருக்கு உற்சாக வரவேற்பு!

## பட்டாசு வெடித்து மாலை அணிவித்து ஆரவாரம்!

பெரம்பலூர், ஏப்,7-

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதிக்கு குன்னம் சட்டமன்ற உறுப்பினரும் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சருமான சா.சி. சிவசங்கர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து தனது சட்டமன்றத் தொகுதிக்கு வருகை தந்த அவருக்கு தி.மு.க மற்றும் கூட்டணி கட்சியினர் மேளதாளம் முழங்க பட்டாசு வெடித்து உற்சாக வரவேற்பு அளித்தனர். அமைச்சர் சா.சி. சிவசங்கருக்கு மாலை மற்றும் பொன்னாடைகள் அணிவித்து மரியாதை செய்து வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர், இதனைத் தொடர்ந்து குன்னம் தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள சட்டமன்ற தொகுதி தேர்தல் அலுவலகத்தில்,

தி.மு.க, மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுக்கு அமைச்சர் சிவசங்கர் பொன்னாடை அணிவித்து மரியாதை செய்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, தி. மதியழகன், சி.ராஜேந்திரன்,

ஒன்றிய கழக பொறுப்பாளர் அழகு.நீலமேகம் மற்றும் தி.மு.க, காங்கிரஸ், ம.தி.மு.க., விடுதலை சிறுத்தைகள், தே.மு.தி.க. உள்ளிட்ட பல்வேறு கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



திருப்பூர் நஞ்சப்பா ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் நடை பயிற்சி மேற்கொள்ளும் பொதுமக்களிடம் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் ந.தினேஷ்குமார் உதயசூரியன் சின்னத்திற்கும், திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் எம்.ரவி (எ) சுப்பிரமணியன் கதிர் அரிவாள் சின்னத்திற்கும் வாக்கு சேகரித்தனர். இதில் திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன், திருப்பூர் தெற்கு மாநகரக் கழக செயலாளர் டிகேடி மு.நாகராசன், திருப்பூர் வடக்கு மாநகரக் கழக பொறுப்பாளர் ஈ. தங்கராஜ் உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதி, உடுமலை தெற்கு ஒன்றியம், பள்ளபாளையம் பகுதியில் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் கனகராஜ் ஏற்பாட்டில் அ.தி.மு.க., த.வெ.க, பா.ஜ.க., உள்ளிட்ட மாற்றுக் கட்சிளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் இரா.ஜெயராமகிருஷ்ணன், உடுமலை தெற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் எம்.ஆர்.பாபு உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# ஒசூர் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் எஸ்.ஏ.சத்யா அறிமுகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ. சிறப்புரை!

கிருஷ்ணகிரி, ஏப். 7-

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், ஒசூர் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பாக திமுக வேட்பாளர் எஸ்.ஏ. சத்யா போட்டியிடுகிறார். ஒசூர் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் அறிமுக கூட்டம் ஒசூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் அறிவித்துள்ள தி.மு.க. வேட்பாளர் எஸ். ஏ. சத்யாவை அறிமுகப்படுத்தி சிறப்புரையாற்றினார் மாவட்டச் செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ.

அவர் பேசும் போது கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் எண்ணற்ற திட்டங்கள் ஒசூர் பகுதிக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. குறிப்பாக 100 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அரசு தலைமை மருத்துவமனை, 50 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் பல் நோக்கு வணிக வளாகம், 50 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது, பாதாள சாக்கடை திட்டம் , இது மட்டும் இல்லாமல் புதிய, புதிய தொழிற்சாலைகள் கொண்டு வரப்பட்டுள்ளது.

அடுத்து அமைய உள்ள திராவிட மாடல் 2.0 ஆட்சியில் மகளிருக்கு மின்சாதன பொருட்கள் வாங்குவதற்காக 8000 ரூபாய்க்கான கூப்பன், கலைஞர் மகளிர் உரிமைத்தகைய 2000 ரூபாய், புதுமைப்பெண், தமிழ் புதல்வன் திட்டத்தின் மூலம் கல்லூரி மாணவருக்கு 1500 ரூபாய் என புதிய புதிய திட்டங்கள் அறிவித்துள்ள கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சியை தோழர்கள் அனைவரும் முழு வீச்சில் பணியாற்றி கழகத் தலைவரால் அறிவிக்கப்பட்டுள்ள ஒசூர் தொகுதி திமுக வேட்பாளர் எஸ்.ஏ. சத்யா அவர்களை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய நீங்கள் எல்லாம் இரவு, பகல் பாராமல் உழைத்து உதயசூரியன் சின்னத்தை வெற்றி கொடி நாட்ட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் என அவர் பேசினார்.

இந்த கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர் பார். இளங்கோவன் மாவட்ட அவைத் தலைவர் யுவராஜ் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழகத் தோழர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




ஈரோடு மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி கொடுமுடி ஒன்றியம் பனப்பாளையம் பகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர் பூங்கொடி சா.செந்தில்நாதன் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். வாக்கு சேகரிப்பில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா க.அ. இராசப்பா

### ஏப்ரல் 7 (1993)



கழகம் துவங்கிய நாளிலிருந்தே உறுப்பினராக இருந்தவர்.

பேரறிஞர் அண்ணா அவர்களால் துவக்கப்பட்ட சீரணியில் குமரி மாவட்டத் தலைவராகவும், பின்னர் மாவட்ட கழகத் துணைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக மிசா கைதியாக பாளையங்கோட்டை சிறையில் ஒரு வருடம் இருந்தவர்.

1986ல் நடைபெற்ற சட்ட எரிப்பு போராட்டத்தின்போது நெஞ்சு வலியால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோதும் “செந்தமிழுக்கு ஒரு தீங்கு வந்த பின் இந்த தேகம் இருந்தென்ன லாபம்” என சொல்லி மருத்துவமனையிலிருந்து சிறைபுகுந்தவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி, தலைமையில்

# நாமக்கல், சேந்தமங்கலத்தில் கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்குச் சேகரிப்பு!

நாமக்கல், ஏப். 7-

நாமக்கல் ஒன்றியம் - காதப்பள்ளி: நாமக்கல் ஒன்றியத்திற்குட்பட்ட காதப்பள்ளியில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் நாமக்கல் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் ப. ராணிக்கு ஆதரவாக தீவிர வாக்கு சேகரிப்பு நடைபெற்றது. நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் கலந்துகொண்டு ஒன்றிய பகுதிகளில் பொதுமக்களிடம் தீவிர வாக்கு பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

இந்த நிகழ்ச்சியில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், ஒன்றிய கழக செயலாளர் வி.கே.பழனிவேல், கூட்டணி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு பொதுமக்களிடம் வாக்குகள் கோரினர்.


அதேபோல் சேந்தமங்கலம் ஒன்றியம் - நரசிம்மன்காடு: சேந்தமங்கலம் ஒன்றியத்திற்குட்பட்ட உத்திரடிகாவல் ஊராட்சி நரசிம்மன்காட்டில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர் பூமலர் பொன்னுசாமிக்கு ஆதரவாக க்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி கலந்து கொண்டு வாக்கு சேகரித்தார்.

இதில் தேர்தல் ஒன்றிய கழக செயலாளர் அ. அசோக்குமார், மாவட்ட துணை செயலாளர் ராணி, பேரூர் கழக செயலாளர்கள் தனபாலன், முருகேசன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஆனந்த் பாபு உள்ளிட்டோர் மற்றும் கூட்டணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஏ.வி.பி. ஆசைத்தம்பி

### ஏப்ரல் 7 (1979)



கழகத்தின் துணைப் பொதுச்செயலாளராகவும், கழகம் போட்டியிட்ட முதல் தேர்தலில் சட்டப்பேரவை உறுப்பினராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் செயல்பட்டவர்.

பெரியார் அவர்களுடைய உணர்வை தன்னுடைய சொற்பொழிவுகளிலே அப்படியே பிரதிபலிக்கின்ற ஒரு பேராற்றல் இருந்த காரணத்தாலேதான் வயதில் இளைஞராக இருந்தாலுங்கூட இவரை வாலிபப் பெரியார் என்று நண்பர்கள் – தோழர்கள் அன்போடு அழைப்பார்கள்.

“கழகத்தின் கருவூலம், தன்மான இயக்கத்தின் சிங்கம், தந்தை பெரியாரின் மாணவர், பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்புத்தம்பி, எனக்கு உற்ற தோழர்” என தலைவர் கலைஞர் தனது உரையில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**